11.03.2026

அ.வ.எண். 229/2022

வா.சா.1 – திரு. நடராஜ், த/பெ. பொன்னுச்சாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 11.03.2026 is accordance with the provision of Act X of 3331

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் தமிழ் தெரியும், ஆங்கிலம் தெரியாது. நான் என்ன பரிகாரம் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஸ்ரீயான்ஸ் ஆட்கள் வந்து மிரட்டினார்கள், அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதியை எவ்வாறு தெரியும் என்றால் இடைத்தரகர் மூலமாக தெரியும். எனக்கு நேரடியாக பிரதிவாதியை தெரியாது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில், 2ம் பக்கத்தில், இணையதளத்தில் பிரதிவாதி நிறுவனத்தின் விளம்பரத்தை பார்த்து பஞ்சு வாங்க தொடர்பு கொண்டேன் என்று சொல்வது பொய் என்றால் இடைத்தரகர் எனக்கு காட்டினார்.

2. நான் நேரடியாக பிரதிவாதியிடம் பேசியதில்லை என்றால் சரிதான். இடைத்தரகர் மூலமாக என்னுடைய மில் மேனேஜரிடம் பேசுவேன். நான் நேரடியாக இடைத்தரகரிடம் பேசியுள்ளேனா என்றால் ஆமாம், 4 – 5 முறை பேசியுள்ளேன். நான் பிரதிவாதியிடம் 1.5 கோடிக்கு பஞ்சு வாங்கியுள்ளேன். மேற்படி பஞ்சை நேரடியாக வாங்கினேனா அல்லது இடைத்தரகர் மூலம் வாங்கினேனா என்றால் இடைத்தரகர் மூலம் வாங்கினேன். என்னுடைய தொழில் சம்மந்தமாக கொள்முதல் செய்ய வேண்டும் என்றால் நான் இடைத்தரகரை தான் அணுகுவேன் என்றால் ஆமாம். எனது பிரமாண வாக்குமூலத்தில், இரண்டு காசோலைகளை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும், அதை யாரிடம் கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் இடைத்தரகரிடம் கொடுத்தேன்.

3. மேற்படி காசோலையை பூர்த்தி செய்யாமல் கொடுத்தேன் என்றால் தொகை நிரப்பி கொடுத்தேன். எவ்வளவு தொகை நிரப்பினேன் என்றும்,

யார் பெயருக்கு குறிப்பிட்டு கொடுத்தேன் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், இது பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 14 ஆண்டுகளாக எனது நிறுவனத்தை நடத்தி வருகிறேன். என்னுடைய நிறுவனத்திற்கு முறையாக சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். எனது நிறுவனத்தின் பெயரில் வருமான வரி கணக்கை தாக்கல் செய்து வருகிறேன்.

4. எனது பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன். அதை படித்து புரிந்துகொண்டேன். எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 3 ல், பாதுகாப்பு காரணத்திற்காக சிட்டி யூனியன் வங்கி, கருமத்தம்பட்டி கிளைக்கான காசோலை எண்.000069 மற்றும் 000072 என்ற எண்ணில் உள்ள இரண்டு பூர்த்தி செய்யாத காசோலையை பிரதிவாதி கேட்டு கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. காசோலை கொடுத்தேன். மேற்படி காசோலைகளை நான் இடைத்தரகரிடம் கொடுத்தேன் என்றால் ஆமாம். ஒரு காசோலை தவறு என திரும்ப ஒரு காசோலை கொடுத்தேன்.

5. நான் பிரதிவாதியிடம் 3 முறை பஞ்சு வாங்கியுள்ளேன். என்னென்ன தேதியில் பஞ்சு வாங்கினேன் என்றால் நினைவில்லை. 3 முறை பஞ்சு வாங்கியதில் மொத்த மதிப்பு ரூ.1,50,43,582/- என்றால் சரிதான். நான், பிரதிவாதிக்கு எவ்வளவு தொகை கொடுத்துள்ளேன் என்றால் ரூ.90 இலட்சம் என பேசி ரூ.90 இலட்சம் கொடுத்தேன்.எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 4 ல், RTGS மூலமாக ரூ.83,39,105/- கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான், பிரதிவாதிக்கு வங்கி பரிவர்த்தனை மூலம் தான் பணம் கொடுப்பேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பணமாக கொடுத்ததில்லை என்றால் சரிதான்.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur